ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 1711/24 - 2011 ජුනි 24 වැනි සිකුරාදා - 2011.06.24

*1711/24 ஆம் இலக்கம் - 2011 ஆம் ஆண்டு யூன் மாதம் 24 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி I : தொகுதி (I)- பொது

*ச.வ.பீ. 21/78.*

## *1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க, பல்கலைக்கழகங்கள் சட்டம்*

*27 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் கீழான கட்டளை*

*1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க, பல்கலைக்கழகங்கள் சட்டத்தின் 27 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவினால் எனக்குரித்தாக்கப்பட்டுள்ள தத்துவங்களின் பயனைக்கொண்டு, உயர்கல்வி அமைச்சர் திசாநாயக்க முதியான்செலாகே சுமணவீர பண்டா திசாநாயக்க ஆகிய நான், பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் விதப்புரையின்மீது, இலங்கையின் தென்கிழக்குப் பல்கலைக்கழகத்தைத் தாபிக்கும் மேற்சொல்லப்பட்ட சட்டத்தின் 21 ஆம் பிரிவின் கீழ் ஆக்கப்பட்டு, 2005, செத்தெம்பர் 30 ஆந் திகதிய 1412/35 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட கட்டளையால் கடைசியாகத் திருத்தப்பட்டவாறான 1996, மாச்சு 27 ஆந் திகதிய 916/7 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட கட்டளையை பின்வருமாறு இக்கட்டளையால் திருத்துகின்றேன்.*

*(1) அத்தகைய கட்டளைக்கான அட்டவணைக்குப் பதிலாகப் பின்வரும் அட்டவணையை இடுவதன்மூலமும் :-*

**"அட்டவணை**

| "நிரல் I<br>பீடம் | நிரல் II<br>துறைகள் |
|---|---|
| கலைகளும் பண்பாடும் பற்றிய பீடம் | 1. சமூக விஞ்ஞானங்கள் துறை<br>2. மொழிகள் துறை<br>3. புவியியல் துறை |
| முகாமையும் வர்த்தகமும் பற்றிய பீடம் | 1. முகாமைத் துறை<br>2. கணக்கியல் மற்றும் நிதித்துறை |
| பிரயோக விஞ்ஞானங்கள் பற்றிய பீடம் | 1. உயிரியல் விஞ்ஞானங்கள் துறை<br>2. பௌதீக விஞ்ஞானங்கள் துறை<br>3. கணிதவியல் விஞ்ஞானங்கள் துறை |
| இஸ்லாமிய கற்கைகள் மற்றும் அராபிய மொழி பற்றிய பீடம் | 1. இஸ்லாமிய கற்கைகள் துறை<br>2. அராபிய மொழித்துறை" அத்துடன் |

*(2) 27 (1) ஆம் பிரிவின் கீழ் ஆக்கப்பட்டதும் 2005, செத்தெம்பர் 30 ஆந் திகதிய 1412/35 ஆம் இலக்க, அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்டதுமான கட்டளையின் (2) ஆம் விடயத்தினை நீக்குவதன்மூலம் (அட்டவணையின் புதிய பீடத்தினைச் சேர்த்தல்).*

திசாநாயக்க முதியான்செலாகே
சுமணவீர பண்டா திசாநாயக்க,
உயர்கல்வி அமைச்சர்.

கொழும்பு,
*2011, யூன் 21.*

*7 - 239/4*